இருப்பதனால் நிறைய பிரச்சினைகள் வருகின்றன. எனவே, அவ்வலுவலகத்தை நகரத்திற்கு வெளியே மாற்ற வேண்டும். ஏற்கெனவே, இதுகுறித்து கடிதம் கொடுத்திருக்கிறேன். அதற்கு பதில் வந்திருக்கிறது. அது என்னிடம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி அலுவலகக் கட்டடத்தை அந்த இடத்திலிருந்து மாற்றுவதற்கு ஏதேனும் நடவடிக்கையை உடனடியாக எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரில் உள்ள ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் அதிக ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்ற காரணத்தால், அங்கே போதிய இடவசதியில்லை, மாற்று இடவசதி வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் குறிப்பிட்டார். பதிவுத் துறையின் மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஒட்டுமொத்த பொதுமக்களுக்கு ஏற்புடைய இடமாகத் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டித் தர பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

168—

கால்நடை மருத்துவமனை

***52417—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, எருமைப்பட்டி ஊராட்சி ஒன்றியம், முத்துக்காபட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பிட்ட கைகள் விலகும் முன்பே வரம் கொடுக்கும் அன்னையின் அரசு என்று போற்றப்படுகின்றது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) மற்றும் (ஆ) உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற இந்த வினா அவைக்கு வருவதற்கு முன்பே கடந்த 25–1–2015–ல் முத்துக்காபட்டி ஊராட்சியிலே புதியதாகக் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி புனித பொற்பாதங்களில் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

அம்மா! எடுத்த சபதம் முடித்து, எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து, வெற்றித் திருமகளாய் மகுடம் சூட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) இடையூறு செய்தவர்களுக்கு நிரந்தரமான விடை கொடுக்கும் விண்ணரசியே தாங்கள்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தாய்மையைப் போற்றும் ஒப்பற்ற தலைவியின் ஆட்சியில் உலகமே கண்டிராத புதியதோர் திட்டமாக, குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க அறை கட்டிக் கொடுத்த தாயுள்ளம் படைத்த பாசமிகு தங்கத் தாரகையே, (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் முழுவதுமுள்ள தமிழ் மக்களின் தன்னம்பிக்கையை வளர்த்த மகா சக்தியே நீங்கள்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, மக்கள் சக்தியும் நீங்கள்தான் அம்மா. பெண்களுக்கு முழுமைபெற்ற ஒரு மருத்துவப் பொக்கிஷத்தைக் கொண்டு வந்த ஸ்ரீரங்கத்துப் பட்டரசியே நீங்கள்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, தர்மத்திற்கு வந்த சோதனை, ஆர்.கே. நகரில் வரலாறு போற்றும் நற்சான்று சாதனை படைத்த தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) புடம்போட்ட தங்கம் என புறப்பட்டு வந்து இந்தச் சபைக்கு அழகு சேர்த்தீர்களே அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வீரத்தையும்,

தியாகத்தையும் போற்றி வணங்கும் ஒப்பில்லாத் தாயின் புகழாட்சி நடத்தும் தமிழகத்தின் தவப் புதல்வியே தாங்கள்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் நாகரிகத்திற்கு இலக்கணமாய் அமைந்த கலைமகளின் மறு உருவாய், அறிவு தீபம் ஏற்றும் மாதரசியே, பசுமைப் புரட்சி, கல்விப் புரட்சி என துறைகள்தோறும் புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா நீங்கள். நீங்கள்தான் அம்மா இந்த உலகம் போற்றும் ஒப்பற்ற தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்ட கேள்வி இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன்னால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களின் நலன் கருதி, முத்துக்காபட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுத்த மகராசி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக மனதார நன்றி கூறுகிறேன்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்தக் கால்நடைக் கிளை நிலையம் கொண்டு வருவதற்கு உறுதுணையாக இருந்த, எனது மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினை இந்த சபையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தங்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு வெள்ளாடுகள், கறவைப் பசுக்கள் ஆகியவற்றை வழங்கி கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வணங்குகிறேன்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் உள்ள கால்நடை மருந்தகமானது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1978 முதல் முதன்மை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, 1987 வரை ஏறக்குறைய சுமார் 9 ஆண்டுகள் சிறப்பான முறையிலே செயல்பட்டது. பின்னர் வந்த தி.மு.க. ஆட்சியில் முதன்மை

2015 ஆகஸ்ட் 31]

கால்நடை மருத்துவமனை கால்நடை மருத்துவமனையாகத் தரம் குறைக்கப்பட்டு தற்போதுவரை செயல்பட்டு வருகிறது. அந்தப் பகுதியானது அருப்புக்கோட்டை, திருச்சுழி, நரிக்குடி ஆகிய 116 பஞ்சாயத்துகளை உள்ளடக்கியது. அந்தப் பஞ்சாயத்துகளில் ஏறக்குறைய 45 ஆயிரத்து 752 மாடுகளும், ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 870 செம்மறி ஆடுகளும், ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 182 வெள்ளாடுகளும் உள்ளன. ஆகவே, ஆய்வுக் கூடம், அறுவை சிகிச்சைக் கூடம் மற்றும் நடமாடும் கால்நடை மருத்துவ யூனிட் ஆகியவற்றை உள்ளடக்கிய நவீன வசதிகளுடன் மீண்டும் பன்முக கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த மருத்துவமனை பெருமருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்றால் பல்வேறு விதிமுறைகள் உள்ளன. அங்கே சிகிச்சைக்கு வருகின்ற கால்நடைகள் தினசரி 80–க்கும் மேற்பட்டவையாக இருக்கவேண்டும். அந்த மருத்துவமனை, துறைக்குச் சொந்தமான இடத்தில் இப்போது இருக்க வேண்டும். அங்கே பணிபுரிகின்ற மருத்துவர்கள், ஆய்வாளர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்ட இட வசதிகள், ஆய்வக வசதிகள் இருக்கவேண்டும். இப்படிப் பல்வேறு வசதிகள் ஏற்படுத்துவதற்கு அங்கே இடம் இருக்கும் என்று சொன்னால், துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, கடந்த தி.மு.க. ஆட்சியிலே தரம் குறைக்கப்பட்ட அந்த மருத்துவமனை மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியினால் பெருமருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை*

நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே தமிழகத்தில் கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் கொடுக்கப்பட்டு, தற்பொழுது அந்தப் பணி முடிகின்ற அளவுக்கு வந்து கொண்டிருக்கின்றது. இதனால் கால்நடைகளின் எண்ணிக்கை தமிழகத்தில் உயர்ந்து இருக்கிறது; அதன் அடிப்படையிலே கால்நடை மருத்துவமனைகளும், மருந்தகங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையிலே இதுவரையில் எந்த ஓர் ஆட்சிக்காலத்திலும் இல்லாத அளவுக்கு ஏறக்குறைய ஓர் ஆண்டிற்கு பட்ஜெட்டிலே ஆயிரம் கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்குகின்ற ஒரே தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—20

கடந்த கால ஆட்சியில் ஒதுக்கப்பட்ட தொகைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட தொகைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும். எந்த ஓர் ஆண்டிலும் 800 கோடி ரூபாய், 1,000 கோடி ரூபாய் என்று கடந்த ஆட்சியில் ஒதுக்கப்பட்டது இல்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே 2011 முதல் 2015 வரை ஒவ்வோர் ஆண்டுக்கும், ஏறக்குறைய 800 கோடி ரூபாய், 900 கோடி ரூபாய், 1,000 கோடி ரூபாய் என்று இந்த ஐந்தாண்டுக் காலங்களில் மட்டும் ஏறக்குறைய 4,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், புதியதாக 150 கால்நடைக் கிளை நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் துவங்கப்பட்டுள்ளன. கடந்தமுறை 100 கால்நடைக் கிளை நிலையங்கள் மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. தற்போது 25 கால்நடைக் கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட நடவடிக்கையில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.